DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai.

**CC.NO.260/2014**

Deposition of Lw5 Examined as PW4 Date: 20.01.2026

| | |
|---|---|
| Name | டாக்டர். வீ.வீரசோழன் |
| Father's/Husband's Name | விஸ்வநாதன் |
| Village | மேலையூர் |
| Taluk | |
| Age | 47/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 20.01.2026

(A2 Present. A1 absent. Petition u/s. 355 BNSS filed and allowed)

**முதல் விசாரணை**

நான் தற்போது தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் தாலுக்காவில் உள்ள அரசு தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகத்தில் பொறுப்பு மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த கடந்த 13.08.2013 ம் தேதி இரவு 09.40 மணியளவில் நான் மயிலாடுதுறை அரசு பெரியார் மருத்துவமனையில் அவரச சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது என்னிடம் 35 வயது மதிக்கத்தக்க ரமேஷ், த/பெ, பன்னீர்செல்வம் என்பவரை வரதன் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார்.அவர் சுயநினைவுடன் இருந்தார். அவரை விசாரித்தபோது தன்னை அன்றைய தினமே இரண்டு நபர்கள் இரவு 08.20 மணியளவில் பொன்வாசநல்லூர் என்ற இடத்தில் 7ம் நம்பர் அரசு பஸ்சில் ஓட்டுநராக பணியில் இருந்தபோது இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் கையால் தாக்கியதாக தகவல் கூறினார். அவரை பரிசோதனை செய்தபோது இரண்டு மார்பகங்களிலும் வலி உள்ளதாக கூறினார். அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து உள் நோயாளியாக அனுமதித்தேன். அவர் சொந்த விருப்பத்தின் பேரில் விடுவிக்கப்பட்ட காரணத்தினால் என்னால் சான்று வழங்க இயலவில்லை. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேடு நான் வழங்கியதுதான். **(விபத்து பதிவேடு அ.சா.ஆ.2. ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சிகிச்சைக்கு வந்த நபருக்கு எந்த விதமான சிகிச்சை அளித்தேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சிகிச்சைக்கு வந்த நபருக்கு டிஸ்சார்ஜ் சம்மெரி வழங்கினேனா என்றால் அவர் தானாகவே சொந்ந விருப்பத்தின் பேரில் டிஸ்சார்ஜ் ஆகிவிட்டார். காயத்தின் தன்மை பற்றி கருத்துரை வழங்கவில்லை என்பதால் என்ன காயம் ஏற்பட்டது என்று என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான்.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

20/1/26

நீதித்துறை நடுவர் எண் I

மயிலாடுதுறை.